# காட்சி - 16

இடம் : (சிவகங்கை) அரண்மனை தர்பார்.

பாத்திரங்கள் : வேலு நாச்சியார், வெள்ளை மருது, சின்ன மருது, சேவகர்கள், ஊர்மக்கள்.

(பின்னணியில் வாங்கா வாத்தியத்தின் நெடிய முழக்கம்; பின்னர் நாதசுர இசை; மேளவாத்திய ஒலி. பின்னர் சேவகர்கள் முன்னே வர, மருது சகோதரர்கள் இருவரும் அருகில் இருமருங்கும் வர, வேலு நாச்சியார் சிம்மாசனத்தில் வந்து அமர்கிறாள். சபையின் இருமருங்கிலும் ஜனங்கள் குழுமி நிற்கிறார்கள்).

சேவ. 2 : வாழ்க வேலு நாச்சியார்!

எல்லாரும் : வாழ்க வேலு நாச்சியார்!

சேவ. 2 : வாழ்க மகாராணி!

எல்லா : வாழ்க மகாராணி!

வேலு : (ஆசனத்திலிருந்து எழுந்து பேசத் தொடங்குகிறாள்) சிவகங்கைப் பொதுமக்களே! வீரர் சிகாமணிகளே! நமது நாட்டை அன்னியர்களிடமிருந்து மீட்டு, என்னை மீண்டும் ராணியாக்கிய உங்கள் ராஜ பக்திக்கும் தியாகபுத்திக்கும் என் மனமார்ந்த நன்றி. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். நாட்டைவிட்டு வெளியேறி நான் திக்கற்றுத் திகைத்துக் கொண்டிருந்த

Scanned with CamScanner

காலத்தில், எனக்கு உற்ற துணையாக இருந்து ஊக்கமளித்து உதவியவர் உங்கள் பிரதானி வெள்ளை மருது சேர்வைகாரரே. மேலும், இந்தச் சிவகங்கையை மீட்பதற்காக அவரடைந்த துன்பங்களும், செய்த தியாகங்களும் அளவிட முடியாதவை. நாட்டுக்கும் நாட்டின் ராணியான எனக்கும் உற்ற துணையாக இருந்தவர் இதோ நிற்கும் பிரதானி வெள்ளை மருது சேர்வை அவர்களே. இவரது தியாகத்துக்கும் தேசபக்திக்கும் கைம்மாறாக, நான் இவரை நமது குலாசாரப்படி மறுமணம்புரிந்து திருமண வாழ்க்கை நடத்தத் தீர்மானித்திருக்கிறேன். இன்று முதல் இவர் பிரதானி மருது சேர்வை அல்ல. உங்கள் ராணியின் கணவர்; உங்கள் நாட்டின் அதிபதி; மருது பாண்டியர்!

சேவ. 2 : வாழ்க மருது பாண்டியர்!

எல்லா : வாழ்க மருது பாண்டியர்!

சேவ. 2 : வாழ்க வேலு நாச்சியார்!

எல்லா : வாழ்க வேலு நாச்சியார்!

சேவ. 2 : வாழ்க ராஜ தம்பதிகள்!

எல்லா : வாழ்க ராஜ தம்பதிகள்!

சேவ. 2 : வாழ்க சிவகங்கை!

எல்லா : வாழ்க சிவகங்கை!

- திரை -

Scanned with CamScanner

## காட்சி - 17

இடம் : தெருக்காட்சி

பாத்திரங்கள் : கிராமவாசி - 1, 2, முத்துப்புலவர், அவர் மனைவி.

(தெருவோரத்தில் கிராமவாசிகள் 1-ம், 2-ம் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்).

கிராம. 1 : என்னண்ணே! நம்ம மருதுராசா ஆட்சி வந்தாலும் வந்தது. அதுக்குப் பிறகுதாண்ணே நமக்கும் நல்லகாலம் புறந்தது. நல்ல வேளையா, அந்தக் குடி கெடுப்பானுக, குத்தகைக்காரப் பாவிங்க தொலைஞ்சாங்க.

கிராம. 2 : எங்கே தம்பி தொலைஞ்சானுக? அவனுக ஒரேயடியாத் தொலைஞ்சுட்டாத்தான் அலுப்பு விட்டதே. ஓடிப்போன பயலுக இன்னும் என்னென்ன கூத்துக்கு வரானுகளோ? யார் கண்டது?

கிராம. 1 : வந்துதான் பார்க்கட்டுமே அண்ணே! வந்தா, நம்ம கை என்ன புளியங்கா பறிக்கவா போயிருக்கு? பயல்களை ஒரு கை பாத்துப்பிடலாம் அண்ணே!

கிராம. 2 : ஹூம், பார்ப்போம், பார்ப்போம்! என்னமோ காளேஸ்வரன் கிருபையாலே நம்ம மருதுராசா ராச்சியம் என்னென்னிக்கும் நிலைச்சி நிக்கணும்.

கிராம. 1 : அண்ணண்ணே! அதோ பாரண்ணே. வண்டி வண்டியா செங்கல்லும் சுண்ணாம்பும் போறதை?

கிராம. 2 : ஆமா தம்பி! அதெல்லாம் எங்கே போவுது?

கிராம. 1 : என்னண்ணே! இதுதான் பூலோகமான்னு கேக்கிறியே? நம்ம காளையார் கோயில் காளேஸ்வரர் கோயிலுக்கு நம்ம மருது பாண்டியரு பனை உசரத்திலே பெரிசா கோபுரம் கட்ட ஏற்பாடு செஞ்சிருக்காருல்லே! தெரியாதா உனக்கு?

கிராம. 2 : தெரியும், தெரியும். இது தெரியாமலா ஊரிலே இருக்கேன்? அதுக்குத்தான் போவுதா? தம்பி, மருது ராசா காளையார் கோயிலுக்கு மட்டும்தானா திருப்பணி செய்திருக்காரு? குன்னக்குடி முருகனுக்குக் கூட, பொன்னாலே கவசம் பண்ணிப்போட்டிருக்காரு, அவரு தம்பி சின்ன மருது.

கிராம. 1 : ஆமாண்ணே, அண்ணனும் தம்பியும் போட்டி போட்டுக்கிட்டு செய்ற மாதிரியில்ல இருக்கு! கோயிலும் குளமும், சத்திரமும் சாவடியும் தானமும் தருமமும் இத்தனை அத்தனை இல்லைண்ணே! தலைமுறை தலைமுறைக்கும் அவங்கபேரு நிலைச்சி நிக்குமண்ணே, நிக்கும்!

கிராம. 2 : அது மட்டுமா, தம்பி, இவங்க ஆட்சி வந்த பிறகு, நம்ம ஊருப் பக்கத்திலே ஒரு கன்னம் களவு, அது இதுன்னு எதாச்சும் ஏற்பட்டிருக்கா? கள்ளனான கள்ளனெல்லாம் அடங்கி ஒடுங்கிப் போயிட்டாங்களே.

கிராம. 1 : அண்ணே! கள்ளன்க பயம் முன்னே மாதிரி இல்லேங்கிறது என்னமோ நிசம்தான். இருந்தாலும் இப்ப வார

Scanned with CamScanner

கள்ளமெனல்லாம் ஆசாரக் கள்ளனண்ணே, ஆசாரக் கள்ளன்! அந்த வெள்ளைக்காரங்களும், நம்ம மருது ராசாவுக்கு வேண்டாத பயல்களும் ஏவிவிடுற கள்ளன்க தொந்தரவு இன்னும் இருக்கத்தானே செய்யுது!

கிராம. 2 : ஆமாமா.

(இந்தச் சமயத்தில் பின்னணியிலிருந்து முத்துப் புலவரின் ஓலம் கேட்கிறது).

முத்துப்புலவர் : (பின்னணியில்) ஐயோ! கேட்பாரில்லையா? இருந்திருந்து பாவிப்பய எம் பங்கிலேயா வந்து விழணும்?

கிராம. 1 : (உள்ளே பார்த்து) அண்ணே! அதோ யாரோ ஒருத்தரு அலறியடிச்சிக்கிட்டு வாராரு. அட! அவருகூட, ஒரு பொம்பளையும் வாரா. வாண்ணே, என்னான்னு விசாரிப்போம்.

கிராம. 2 : நில்லுடாப்பா. அவங்க இங்கேதான் வாராப்பிலே இருக்கு. பொறு, என்னான்னு பார்ப்போம்.

(புலவர் தம் மனைவியுடன் பிரவேசிக்கிறார். கிராமவாசிகளைக் கண்டதும் மீண்டும் கூச்சலிடத் தொடங்குகிறார்).

முத்துப் : அட, பாவிங்களா! நீங்க உருப்படுவீங்களா? உங்க புள்ளை குட்டிங்க உருப்படுமா? நீங்க விளங்குவீங்களா? உங்களைத் தெய்வம் சும்மா விடுமா?

கிராம. 1 : (வியந்து) என்னண்ணே இது? இவரு நம்மை ஏன் இப்படித் திட்டுறாரு?

Scanned with CamScanner

முத்துப் : அட, போங்கய்யா! உங்களை ஒண்ணும் திட்டலெ. என். வயத்தெரிச்சலைக் கொட்டுறேன். அந்தப் படுபாவிப் பயலுக...

கிராம. 1 : எந்தப் பயலுக? பெரியவரே! ஆத்திரப்படாதீங்க. ஆர அமர நின்னு விஷயத்தைச் சொல்லங்க. நீங்க யாரு? ஏன் இப்படி அழுது புலம்பிக்கிட்டு வாரீங்க?

முத்துப் : கேளுங்கய்யா. இந்த அநியாயத்தை! நானோ ஒரு ஏழைப் புலவன்; ராப் பட்டினிக்காரன். என்னமோ பாட்டுப் பாடிப் பிழைக்கிறவன். இதோ பாத்திங்களா, இவதான் என் பொஞ்சாதி. இவ கழுத்திலே நான் கட்டியிருந்த தாலியைத் தவிர, வேறே காதிலே கழுத்திலே அரை மஞ்சாடித் தங்கம்கூடக் கிடையாது. ஆனா, அந்தப் படுபாவி திருட்டுப் பசங்க அந்தத் தாலியைக்கூட, அறுத்துப் பறிச்சிக்கிட்டாங்கய்யா. வார வழியிலே எங்களை வழி மறிச்சி, தாலியைக் கழட்டிக்கொடுன்னு கத்தியைக் காட்டி மிரட்டி, கழட்டிக்கிட்டுப் போயிட்டாங்கய்யா! இந்த அநியாயத்தை நான் எங்கே சொல்லி அழ?

கிராம. 1 : ஐயா, புலவரையா! வருத்தப்படாதீங்க. உங்களுக்கு எங்க மருது பாண்டிய ராசாவைத் தெரியுமா?

முத்துப் : மருது பாண்டியரா? கேள்விப் பட்டதுண்டே தவிர, பார்த்ததில்லை ஐயா!

கிராம. 1 : எங்க ராசாவுக்குப் புலவர்ன்னா ஒரே உசுரு. நீங்க அவரைப் போய்ப் பாருங்க. உங்க குறையை அவர் கேட்பாரு.

Scanned with CamScanner

கேட்டுத் தீர்த்து வைப்பாரு. இப்பவே போங்க.

முத்துப் : அப்படியாய்யா? அரண்மனை எந்தத் திக்கிலே இருக்கு?

கிராம. 1 : (சுட்டிக்காட்டி) இதோ இந்தத் திக்கிலேதான். போங்க.

முத்துப் : நீங்க நல்லா இருக்கணும். நாங்க வாரோமய்யா. (மனைவியிடம் திரும்பி) ஏண்டி! இன்னும் ஏன் கண்ணைக் கசக்கிக்கிட்டு நிக்கறெ? வாடி, போகலாம். அந்தப் பய உன்னைத் தொட்டுப் பறிக்கிற வரையிலும் நீ விட்டுக்கிட்டு இருந்தியே. என் மானம் போகுதடீ, மானம் போகுது!

புலவர் மனைவி : பின்னே? உங்க கண் முன்னாலேயே தாலியைக் கழட்டிக் கொடுக்கணும்னு சொல்றீங்களா?

முத்துப் : அதுதான் என் கண் முன்னாலேயே, இப்படி அறுத்த கழுத்தோட நிக்கிறியே. அது போராது? வா, வா, உன் தாலிப்பாக்கியம் எப்படி இருக்குன்னு போய்ப் பார்ப்போம்.

பு. மனைவி : நீங்க இருக்கயிலே, பாக்கியத்துக்கு என்ன குறைச்சல்?

முத்துப் : வாய் மட்டும் கிழியுது; வாடி போகலாம்.

(இருவரும் போகிறார்கள்).

– திரை –

Scanned with CamScanner

## காட்சி - 18

இடம் : (சிவகங்கை) அரண்மனைக் காட்சி

பாத்திரங்கள் : வெள்ளை மருது, சின்ன மருது, முத்துப் புலவர், அவர் மனைவி, சேவகன் - 1.

(அரண்மனையில் வெள்ளை மருதுவும் சின்ன மருதுவும் அமர்ந்திருக்கும்போது, சேவகன் - 1 வருகிறான்).

சேவ. 1 : மகாராஜா! தங்களைக் காண முத்துப் புலவர் என்ற கவிராயர் ஒருவர் வந்திருக்கிறார்.

வெள்ளை : என்ன, புலவரா? போ. அவரை உடனே இங்கு அழைத்துவா.

சேவ. 1 : உத்தரவு மகாராஜா

(சேவகன் சென்று புலவருடனும் புலவர் மனைவியுடனும் திரும்பி வருகிறான்).

முத்துப் : (வந்ததும் வணங்கி) மருது பாண்டிய மன்னரே (மனைவியிடம் திரும்பி) என்னடி, மரமாட்டம் நிக்கிறே? மகாராஜாவைக் கும்பிடடி!

வெள்ளை : வாருங்கள் தமிழ்ப் புலவரே, வாருங்கள். இப்படி அமருங்கள். உம்முடன் வந்திருக்கும் அந்தப் பெண்மணி யார்?

(புலவர் ஆசனத்தில் அமர்கிறார்).

முத்துப் : மகாராஜா! இவள் என் மனைவி.

Scanned with CamScanner

வெள்ளை : அப்படியா! மிக்க மகிழ்ச்சி. தாங்கள் இங்கு வருகை தந்தது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் என்னை நாடிவந்த காரணம் என்னவோ? தங்கள் முகத்தைப் பார்த்தால் ஏதோ மிகுந்த வாட்டம் தென்படுகிறதே!

முத்துப் : மருது பாண்டிய மன்னவா! இதோ என் மனைவியின் கழுத்தைப் பாருங்கள். கட்டிய புருஷனான நான் அருகில் இருக்கும்போதே, இவளது தாலிக்கயிறு பறிபோய்விட்டது, மன்னவா! பறிபோய் விட்டது!

வெள்ளை : என்ன, தாலி பறிபோய்விட்டதா? ஒன்றும் புரியவில்லையே புலவரே!

முத்துப் : மருதரசே! நானோ ஒரு ஏழைப் புலவன். என் மனைவிக்குத் தாலியைத் தவிர வேறு எவ்வித நகைகளுமே செய்துபோட வகையற்றவன். ஆனால் அந்தத் தாலியைக் கூட, ஒரு திருடன் தட்டிப் பறித்துக்கொண்டு போய்விட்டான். மருது பாண்டியரே! உங்கள் நாட்டில் கட்டிய கணவன் உயிரோடிருக்கும்போதே மனைவியின் தாலி அறுபடலாமா? இந்த அநியாயம் உங்கள் நாட்டின் எல்லைக்குள் நடைபெறலாமா? உங்களுடைய செங்கோல் ஆட்சி என்ன, பகலில் மட்டும்தானா? அல்லது இந்தச் சீமையெல்லாம் நீங்கள் கள்ளர்களின் கொள்ளைக்குச் சாசனம் செய்துவிட்டீர்களா?

(பாட்டு)

*மருவிருக்கும் கூந்தல்*
*மனையாள், கணவன்*
*அருகிருக்க, தாலி*
*அறுமா? - இரவு உனக்குச்*

*செங்கோல் இலையா? இத்*
*தேசமெல்லாம் கள்ளருக்குப்*
*பங்கோ? மருது பூ*
*பா!*

வெள்ளை : புலவர் பெருமானே! உங்கள் தமிழ்ப் புலமையைக் கண்டு என் மனம் மகிழ்ச்சியால் விம்முகிறது. ஆனால் நீங்கள் அடைந்த துன்பத்தை நினைக்கும் போதோ நெஞ்சமே புண்ணாகிறது. புலவர் பெருமானே! கவலையை விடுங்கள். உங்களை வழி மறித்துக் களவாடிய அந்தக் கள்வன் யாராயிருந்தாலும் சரி, அவனை எப்படியேனும் கண்டுபிடித்து, தகுந்த தண்டனை அளிக்கிறேன். (சின்ன மருதுவிடம் திரும்பி) தம்பி, சின்ன மருது!

சின்ன : அண்ணா!

வெள்ளை : தம்பி! இந்தப் புலவர் பெருமானுக்கு இன்றே ஆறு கழஞ்சு தங்கத்தில் புதியதொரு தாலி செய்து கொடுக்க ஏற்பாடு செய். அவரது கையாலேயே அந்தத் தாலியை அவர் தம் மனைவியின் கழுத்தில் பூட்டி மகிழட்டும். அதுமட்டும் அல்ல. இவருக்கு வேண்டிய சன்மானங்கள் அனைத்தும் கொடுக்க ஏற்பாடுசெய். அவரது மனைவிக்கு ஆடையணிகள், ஆபரணங்கள் முதலியவற்றையும் வேண்டுமளவு கொடுக்க ஏற்பாடு செய்.

சின்ன : அப்படியே, அண்ணா!

வெள்ளை : புலவர் பெருமானே! தாங்கள் எங்கள் அரண்மனையின் அதிதி மாளிகையில் தங்கி, சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். தாங்கள் சில நாட்கள் இங்குத் தங்கி, தங்கள் இனிய தமிழ்க்

கவிகளால் என்னை இன்புறச் செய்துவிட்டுத்தான் செல்லவேண்டும்.

**முத்துப்** : மன்னவா! தங்கள் சித்தம் என் பாக்கியம்.

**வெள்ளை** : யாரடா சேவகா! இந்தப் புலவர் பெருமானை நமது அதிதி மாளிகைக்கு அழைத்துச் செல்.

**சேவ. 1** : உத்தரவு மகாராஜா.

**முத்துப்** : (ஆசனத்தைவிட்டு எழுந்து) மருது பாண்டிய மன்னவா! வாழ்க நின் கொற்றம்! வாழ்க நின் சுற்றம்!

(வணங்கிவிட்டு, மனைவியுடன் சேவகனைப் பின்பற்றிச் செல்கிறார்).

- திரை -

## காட்சி - 19

**இடம்** : (சிவகங்கை) அரண்மனை.

**பாத்திரங்கள்** : வெள்ளை மருது, சின்ன மருது, சேவகர்கள், ஒற்றன்.

(வெள்ளை மருதுவும் சின்ன மருதுவும் அமர்ந்திருக்கும் போது சேவகன் - 1 வருகிறான்).

**சேவ. 1** : (பணிந்து) மகாராஜா! நமது ஒற்றன் ஒருவன் செய்தி கொண்டுவந்திருக்கிறான்.

**வெள்ளை** : ஒற்றனா? வரச்சொல் உடனே.

**சேவ. 1** : உத்தரவு மகாராஜா.

(சேவகன் - 1 சென்று ஒற்றனுடன் திரும்புகிறான்).

**ஒற்றன்** : மகாராஜா!

Scanned with CamScanner

வெள்ளை : என்ன செய்தி கொண்டுவந்தாய்?

ஒற்றன் : மிகவும் துக்கமான செய்தி, மகாராஜா.

சின்ன : துக்கமான செய்தியா? சொல் சீக்கிரம்.

ஒற்றன் : மகாராஜா! சொல்லவே நாக் கூசுகிறது. பாஞ்சாலங்குறிச்சி மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனை இன்று காலையில் கும்பினி அதிகாரிகள் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டார்கள்!

வெள்ளை : ஆ! தூக்கிலிட்டுவிட்டார்களா?

ஒற்றன் : ஆம் மகாராஜா. கயத்தாற்றில் ஒரு கட்டைப் புளிய மரத்தில் மேஜர் பானர்மான் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டான்.

சின்ன : ஊமைத்துரை என்ன ஆனார்?

ஒற்றன் : ஊமைத்துரையையும் அவருடன் பிடிபட்டவர்களையும் பாளையங் கோட்டைச் சிறையில் அடைத்துவைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் மகாராஜா.

வெள்ளை : வேறு செய்திகள் உண்டா?

ஒற்றன் : இல்லை மகாராஜா.

வெள்ளை : சரி, நீ உடனே மீண்டும் தெற்கே செல். தென்னாட்டில் நடைபெறும் முக்கிய சம்பவங்களையும் செய்திகளையும் உடனுக்குடன் இங்குத் தெரிவிக்க ஏற்பாடு செய். துணைக்கு வேறு சில ஒற்றர்களையும் அழைத்துக்கொண்டு செல். சரி, நீ போகலாம்.

ஒற்றன் : உத்தரவு மகாராஜா. நான் வருகிறேன்.

(ஒற்றனும் சேவகன் 1-ம் செல்கிறார்கள்).

Scanned with CamScanner

வெள்ளை : தம்பி சின்னமருது, செய்தியைக் கேட்டு என் சிந்தை கலங்குகிறது. கட்டபொம்மன் நமக்கு உற்ற நண்பர். நாம் அவருக்குப் பலமாகவும் அவர் நமக்குப் பலமாகவும் இருந்து வந்தோம். ஆனால் இன்று அவரது மரணச் செய்தி நமது கண்களில் ஒன்றையே கொத்திப் பிடுங்கிய மாதிரி இருக்கிறது. பாவம்! அவர் விதி இப்படியா முடிய வேண்டும்?

சின்ன : இது விதியில்லை அண்ணா; பெரும் சதி. நமது அண்டை நாட்டானான புதுக்கோட்டைத் தொண்டைமானே அற்ப ஆசையால் கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்தான். அன்னியர்களின் ஆதிக்க வேட்டைக்கு அவனைப் போன்ற அடிமைப்புத்திக்காரர்களே உதவி செய்கிறார்கள் அண்ணா. இந்த அன்னியர்களை நாம் நம்பவே கூடாது. கடல் கடந்து வந்த வெள்ளைக் கயவர்கள் அவர்கள்; உறவாடிக் கெடுக்கும் நயவஞ்சக நல்ல பாம்புகள்!

வெள்ளை : தம்பி, நாடாள வந்தவனிடம் நாணயத்தை எதிர்பார்க்க முடியுமா?

சின்ன : ஆம் அண்ணா. இன்று பாஞ்சாலங்குறிச்சி; நாளை சிவகங்கை. இன்று கட்டபொம்மன்; நாளை இதே கதி நமக்கும் நேரக்கூடும். அண்ணா! இந்தச் சமயத்தில் நாம் விழிப்போடு இல்லாவிட்டால், இந்த வெள்ளைப் பிசாசுகள் நம்மையும் சுவடு தெரியாமல் சுட்டுப் பொசுக்கிவிடும்!

வெள்ளை : ஆம், தம்பி. ஆபத்து அதிக தூரத்தில் இல்லை.

Scanned with CamScanner

சின்ன : இனியும் நாம் சும்மா இருப்பதில் அர்த்தமில்லை. அண்ணா! இன்று முதலே நாம் நமது படைபலத்தைப் பெருக்க முனைய வேண்டும். எதிரியின் தாக்குதல் எங்கிருந்து, எப்படி; எந்தச் சமயத்தில் வருமென்றே சொல்வதற்கில்லை.

வெள்ளை : உண்மைதான். சிறுத்தைப் புலி பல்லைக் காட்டுகிறது என்றால் சிரிக்கிறது என்று அர்த்தமில்லைதான். வெள்ளையர்கள் இன்று நம்முடன் மோதாமல் உறவு பாராட்டி வருகிறார்கள் என்றால், நமது ஆட்சியை அவர்கள் அங்கீகரித்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல. நாமும் நமது படைபலத்தைப் பெருக்க வேண்டியதுதான். வந்தபின் காப்பதை விட வருமுன் காப்பதே விவேகம்.

சின்ன : (வருத்தத்தோடு) ஆனால் - இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே - அதை எண்ணும் போதுதான்...

வெள்ளை : எதை எண்ணும்போது? சின்ன மருது, நீ என்ன சொல்ல வருகிறாய்?

சின்ன : இல்லையண்ணா. இத்தகைய சந்தர்ப்பத்திலே நமது ராணி வேலுநாச்சியாரும் படுத்த படுக்கையாக இருக்கிறார்களே என்பதை எண்ணித்தான்-

வெள்ளை : (பெருமூச்சோடு) ஆம், தம்பி. அதுவும் நமது துரதிருஷ்டம்தான். வேலு பிழைத்தெழுந்து விடுவாள் என்ற நம்பிக்கைக்கே இடமில்லை. சரி, வா. நாம் வேலுவைப் பார்த்துவிட்டு வரலாம்.

சின்ன : சரி அண்ணா.

(இருவரும் எழுந்து செல்கிறார்கள்).

- திரை -

Scanned with CamScanner

# காட்சி - 20

**இடம்** : (சிவகங்கை) அரண்மனை அந்தப்புரம்.

**பாத்திரங்கள்** : வேலுநாச்சியார், வெள்ளை மருது, சின்ன மருது.

(வேலுநாச்சியார் நோய்ப்படுக்கையில் படுத்துக்கிடக்கிறாள். அடிக்கொரு தரம் இருமிக்கொள்கிறாள். அந்தச் சமயத்தில் மருது சகோதரர்கள் இருவரும் அங்கு வந்து சேர்கிறார்கள்).

**வெள்ளை** : (உள்ளே வந்து வேலுவின் அருகில் சென்று) வேலு! வேலு!

**வேலு** : (மூடியிருந்த கண்களைத் திறந்து) யாரது?

**சின்ன** : என்ன அண்ணி? அண்ணா மருது பாண்டியர் வந்திருக்கிறார்.

**வேலு** : (இருமியவாறே) தாங்களா? எப்போது வந்தீர்கள்?

**வெள்ளை** : இப்போதுதான்.

**வேலு** : சரி, இப்படி என் அருகில் உட்காருங்கள். கட்டபொம்முவைப் பற்றி ஏதோ செய்தி வந்ததாமே, என்ன அது?

**வெள்ளை** : ஆம். வந்தது, வேலு! கட்டபொம்மு இறந்து விட்டார். வெள்ளையர்கள் அவரைக் கொன்றுவிட்டார்கள்.

**வேலு** : கொன்றுவிட்டார்களா? அடப்பாவிகளா? (இருமுகிறாள்)

Scanned with CamScanner

வெள்ளை : வேலு, நீ அதை எல்லாம் எண்ணி உடம்பை அலட்டிக்கொள்ளாதே. நீயோ நோயாளி. எதையாவது எண்ணிக் கவலைப்பட்டால் உடம்புக்கு ஆகாது.

வேலு : கவலைப்படுவதற்கு இனி என்ன இருக்கிறது, ராஜா? இனி நான் பிழைக்கப் போவதில்லை. இன்றோ, நாளையோ, இல்லை சிறிது நேரமோ? சாவு என்னைத் தினம் தினம் நெருங்கிக் கொண்டே வருகிறது.

வெள்ளை : வேலு, வீணாக வேண்டாததையெல்லாம் ஏன் பேசிக்கொண்டிருக்கிறாய்?

வேலு : ராஜா பேச வேண்டிய காலம் வந்தால் பேசித் தானே ஆகவேண்டும்? கேளுங்கள். நான் நிச்சயம் பிழைக்கப் போவதில்லை. நான் மாண்டுவிட்டால், நீங்கள் இருவரும்தான் இந்தச் சீமையைப் பரிபாலனம் செய்ய வேண்டும்.

வெள்ளை : இப்போதும் நாங்கள்தானே பார்த்து வருகிறோம், வேலு.

வேலு : உண்மைதான். என்றாலும் இந்தச் சிவகங்கைச் சீமையின் வாரிசுரிமை இப்போது என் பெயருக்குத் தான் இருக்கிறது. இதை உங்கள் பெயருக்கு மாற்றிவிட வேண்டும். நான் உயிருடன் இருக்கும்போதே இந்தக் காரியத்தைச் செய்துவிட விரும்புகிறேன்.

வெள்ளை : அதைப்பற்றியெல்லாம் நீ ஏன் கவலைப் படுகிறாய்? வாரிசுப் பாத்தியதையைப் பற்றி மக்கள் வாய் திறந்து கேட்கும் அளவுக்கு நாங்கள் இந்த நாட்டை

அரசாளவில்லையே. நாட்டு மக்களின் ஆதரவோடும் அங்கீகாரத்தோடும்தானே இதனை ஆண்டுவருகிறோம்.

வேலு : நாட்டு மக்களுக்காகச் சொல்லவில்லை. நாளைவரக் கூடியதை எண்ணித்தான் சொல்கிறேன்.

வெள்ளை : சரி, உன் இஷ்டம் போலவே செய்துவிடுவோம். நீ பேசாது கண்ணை மூடித் தூங்கு.

வேலு : இனி எனக்கு ஒரே தூக்கம்தான் பாக்கி - நிம்மதியான தூக்கம், நிரந்தரமான தூக்கம்! அந்த தூக்கம் ஒன்றைத்தான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

வெள்ளை : அப்படி எல்லாம் பேசாதே. காளேஸ்வரன் உன்னை நிச்சயம் காப்பாற்றுவான்.

வேலு : அந்தக் காளேஸ்வரன் உங்கள் இருவரையேனும் நல்லபடியாகக் காப்பாற்ற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

வெள்ளை : உன் பிரார்த்தனை நிச்சயம் நிறைவேறும். நீ பேசாமல் நிம்மதியாகத் தூங்கு. நாங்கள் வருகிறோம்.

வேலு : சரி, சென்று வாருங்கள். (இருமுகிறாள்)

(மருது சகோதரர்கள் இருவரும் செல்கிறார்கள்)

- திரை -

Scanned with CamScanner